செய்தி வெளியீடு எண்: 910 நாள்: 12.12.2018

## செய்தி வெளியீடு

## புயலினால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலை பழ மரங்களை பராமரிக்கும் முறைகள்

கடந்த மாதம் நவம்பர் 16ம் தேதி அன்று வீசிய கஜா புயலின் காரணமாக தமிழ் நாட்டில் புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், கடலூர், திருவாரூர், திண்டுக்கல், போன்ற மாவட்டங்களில் முந்திரி மரங்கள் அதிக அளவில் சேதம் அடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட முந்திரி, வாழை, மா மற்றும் பலா மரங்களை மறு சீரமைப்பதன் மூலம் மீண்டும் புத்துயிர் கொடுக்க முடியும்.

### 1.முந்திரி

**பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றுதல்**

- வேருடன் சாய்ந்த முற்றிலும் பாதிப்படைந்த மரங்களை முழுமையாக வெட்டி அகற்ற வேண்டும்.

**இளம் மரங்கள் பராமரிப்பு**

- இளம் செடிகள் மற்றும் மூன்று வயதுடைய மரங்கள் சாய்ந்திருந்தால் அவற்றினை முட்டுக்கொடுத்து நேர் நிறுத்த வேண்டும்.
- தேங்கி நிற்கும் மழை நீரினை வடித்து விட வேண்டும்.
- மரங்களின் அடிப் பகுதியில் மண் அணைத்து விட வேண்டும்.

**பராமரிப்பு**

- ஈரத்தன்மையினை நிலைநிறுத்தும் பொருட்டு மரத்தினை சுற்றி காய்ந்த இலை மற்றும் தழைகளை இட வேண்டும்.
- மரங்களை பூச்சி தாக்குதலிருந்து பாதுகாக்க குயினல்பாஸ், டைமெத்தோயேட் 2 மில்லி / லிட்டர் நீர் என்ற அளவில் அனைத்து மரங்களில் தெளிக்க வேண்டும்.
- முந்திரி தோட்டங்களை தூய்மையாக வைத்து இருக்க வேண்டும்.
- கிளைகள் நன்றாக உள்ள மரங்களுக்கு, மோனோ–அம்மோனியம் பாஸ்பேட் 10 கிராம் ஒரு லிட்டர் (1.). தண்ணீருக்கு என்ற அளவில் இலை வழி ஊட்டமாகத் தெளிக்கலாம். இதனால் பூக்கள் காய்பிடிப்புத்தன்மை அதிகமாகும்.

**காய்க்கும் மரங்கள் பராமரிப்பு**

- பாதிப்படைந்த காய்க்கும் பருவத்திலுள்ள மரங்கள் சாய்ந்திருந்தால் முட்டுக் கொடுத்து நிலை நிறுத்திட வேண்டும்.
- பாதிப்படைந்த மரத்தில் 60 சத கிளைகளை வெட்டி அகற்ற வேண்டும். வெட்டு பாகத்தில் காப்பர் ஆக்சி குளோரைடு பசையை தடவ வேண்டும் (300 கிராம் / லிட்டர்).

- வேர்பகுதிகளுக்கு நல்ல பிடிமானம் ஏற்படுத்திட மண் அணைத்திட வேண்டும்
- ஒவ்வொரு மரத்திற்கும் 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 2 கிலோ மண்புழு உரம், 100 கிராம், டிரைகோடெர்மா விரிடி, 100 கிராம் சூடோமோனஸ், அசோஸ்பைரில்லம் (100 கிராம்) கலந்து இட வேண்டும்.
- முந்திரி மரங்கள் புதிய கொழுந்து விட்டு பூக்கும் தருவாயில் நிலையில் உள்ளதால் தேயிலை கொசு தாக்குதலில் இருந்து மரத்தினை பாதுகாத்திட லேம்டா சைகலோத்திரின் 18.5 இ.சி 0.5 மி,லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது புரோபினோபாஸ் 50 இ.சி 2.0 மி.லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் கிளைகள் நன்கு நனையும் படி தெளிக்க வேண்டும்.

**2. வாழை**

**<u>பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றுதல்</u>**

- புயல் தாக்குதலில் கீழே சாய்ந்த மரங்களை மண் பரப்பிலிருந்து 1 அடி உயரத்தில் உள்ள தண்டு பகுதியை விட்டு அகற்ற வேண்டும்.
- இத்தண்டுகளை சிறு சிறு துகள்களாக சிதைத்து மண்ணோடு மண்ணாக கலந்து உழலாம் அல்லது சிறு எருகுழி தோண்டி அதில் இட்டு சிறிது நாட்களில் உரமாக மாற்றி உபயோகப்படுத்தலாம்.

**<u>கிழங்குகளை பராமரித்தல்</u>**

- கிழங்கு பகுதியை மண் பரப்பிற்கு வெளியே தெரியாதவாறு மண்ணால் மூட வேண்டும்
- புயல் தாக்குதலுக்கு உள்ளான மரங்களின் தண்டுகளை அகற்றிய பிறகு கிழங்கு பகுதியில் உள்ள இரண்டு ஈட்டி இலை கன்றுகளை மட்டும் வளர விட வேண்டும்.
- சாய்ந்த மரங்களின் கிழங்குகளில் நோய் தாக்கத்தை கட்டுபடுத்திட காப்பர் ஆக்சி குளோரைடு 2 கிராம்/லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து கிழங்குகளை நனைத்தல் வேண்டும்.

**<u>பின்செய் நேர்த்தி</u>**

- கிழங்குகளை, கூன் வண்டு தாக்குதலில் இருந்து பாதுகாத்திட 10–20 கிராம் கார்பரில் பூச்சி கொல்லி மருந்தை கிழங்கு பகுதியை சுற்றி தூவி மண்ணை கிளறி விட வேண்டும்.
- இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மண்வெட்டி கொண்டு மண் அணைக்க வேண்டும். மாதம் ஒரு முறை பக்க கன்றுகளை அகற்ற வேண்டும்.

- காய்ந்த மற்றும் நோய் தாக்கப்பட்ட இலைகளை சேகரித்து எரித்து விட வேண்டும். இவ்வாறு செய்தால் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்தலாம்.
- வெயிலினால் காய்கள் சேதம் அடைவதை தடுக்க குலைகளை வாழை இலைகள் கொண்டு மறைத்து வைக்க வேண்டும்.
- ஒரு வாழை மரத்திற்கு 10 கிராம் கார்போபியூரான், டிஎபி 40 கிராம், வேப்பம் புண்ணாக்கு 500 கிராம் மற்றும் தொழு உரம் ஆகியவற்றை இட்ட பின்பு தேர்வு செய்த வாழை கன்றுகளை நூ அடி ஆழத்தில் நடவு செய்ய வேண்டும்.
- வாழை சாகுபடிக்கு 110 கிராம் தழைச்சத்து, 35 கிராம் மணி சத்து, 330 கிராம் சாம்பல் சத்து உர அளவு தேவைப்படும். தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகளைத் தரக்கூடிய யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள் மூன்று சம பாகங்களாக பிரித்து அவற்றை கன்று நட்ட 3, 5 மற்றும் 7 வது மாதங்களில் இட வேண்டும். ஒரு மரத்திற்கு 400 கிராம் யூரியா, 300 சூப்பர் பாஸ்பேட் மற்றும் 600 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் இட வேண்டும்.
- பியூசேரியம் வாடல் நோயை கட்டுப்படுத்த 200 மி.லி கார்பென்டைசிம் கேப்சூலை தண்டில் செலுத்தவேண்டும். மேலும் நடவு செய்த உடன் கிழங்கைச் சுற்றி மண் எடுத்து ஒரு கிழங்கிற்கு 20 கிராம் டிரெய்கோடெர்மபா விரிடி மற்றும் 20 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் ஆகிய எதிர் உயிர்க்கொல்லிகளை நூ கிலோ மண்புழு உரத்துடன் கலந்து இட்டு மண்ணால் மூடி நீர் பாய்ச்ச வேண்டும்.

**3.பலா**

**பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றுதல்**

- புயலினால் வேருடன் சாய்ந்த மரங்களை முழுமையாக வெட்டி அகற்ற வேண்டும்.

**இளம் மரங்கள் பராமரிப்பு (3 வயதிற்குள்)**

- 1 முதல் 3 வயதுள்ள பலா கன்றுகள் மற்றும் ஒட்டுச் செடிகளை முட்டுக் கொடுத்து நிலை நிறுத்திக் கொள்ளலாம். முட்டுக்கொடுப்பதற்கு பச்சை குச்சிகளை பயன்படுத்துவது சிறந்தது.
- பலா கன்றுகள் மற்றும் ஒட்டுச் செடிகளை சுற்றியுள்ள மேல் மண்ணை கொண்டு செடிகளை சுற்றி முகடு அமைக்கும் போது வேர்கள் காயப்படாமல் இருக்க வேண்டும்.

**<u>மரங்கள் பராமரிப்பு (3 வயதிற்கு மேல்)</u>**

- பலா கன்றுகள் மற்றும் ஒட்டுச் செடிகள் 3 வயதிற்கு மேல் இருப்பின் பக்கவாட்டு கிளைகளை சிறிதளவு களைத்து வெட்டி எடுப்பதன் மூலம் மரங்களை அந்தந்த இடத்திலேயே நிமிர்த்தி நடவதற்கு ஏதுவாக இருக்கும்.
- வெட்டப்பட்ட பகுதிகளில் பூஞ்சாண நோய் பரப்பும் கிருமிகள் தாக்கிய இடங்களில் காப்பர் ஆக்சி குளோரைடு (3 கிராம் / 10 மி.லி தண்ணீர்) பசையை பூச வேண்டும்.
- பாதிப்படைந்து நிலை நிறுத்தப்பட்ட மரங்களின் ஈரத்தன்மையினை நிலைநிறுத்தும் பொருட்டு மரத்தினை சுற்றி காய்ந்த இலை மற்றும் தழைகளை இட வேண்டும்.
- மரங்களை நோய் தாக்குதலிருந்து பாதுகாக்கும் வண்ணம் காப்பர் ஆக்சி குளோரைடு 3 கிராம் / லிட்டர் வீதம் கலந்து வேர் பகுதி நன்றாக நனையும் வண்ணம் மரத்திற்கு 5–10 லிட்டர் வரை ஊற்ற வேண்டும் அல்லது காப்பர் ஆக்சி குளோரைடு மருந்தினை 2.5 கிராம் / லிட்டர் தண்ணீர் என்ற அளவில் இலைகள் நனையுமாறு தெளிக்க வேண்டும்.
- பூச்சி தாக்குதலிருந்து பாதுகாக்க குயினால்பாஸ் அல்லது டைமெத்தோயேட் 2 மில்லி / லிட்டர் வீதம் அனைத்து மரங்களிளும் தெளிக்க வேண்டும்.
- 5 வருடத்திற்கு மேற்பட்ட மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு 1 1/2 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட், 0.8 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஸ், 50 கிலோ தொழு உரம், 100 கிராம் டிரைகோடர்மா விரிடி, 100 கிராம் சூடோமோனஸ் ஆகியவற்றை இட வேண்டும்.
- உயர் விளைச்சலுக்கு உகந்த பாலூர்–1 மற்றும் பாலூர்–2 இரக பலா ஒட்டுச் செடிகளை நடவு செய்யலாம். எக்டருக்கு 156 ஒட்டுச்செடிகள் வரை 8x8 மீட்டர் இடைவெளியில் 1x1x1 அளவிற்கு குழி எடுத்து நடவு செய்ய வேண்டும். வரப்புகள் மற்றும் வீட்டின் பின்புறங்களிலும் நடவு செய்யலாம்.

**4.மா**

**வயது வரை உள்ள மரங்கள்**

- காற்றினால் வேர் பகுதி சேதமடையாமல், மரங்கள் சாய்ந்திருந்தால் நேராக நிமிர்த்தி மண் அணைக்க வேண்டும்.
- பூச்சி மற்றும் நோய் தாக்கப்பட்ட கிளைகளை வெட்டி அப்புறப்படுத்தி, பின்பு வெட்டு பாகத்தில் காப்பர் ஆக்சி குளோரைடு பசையை 300 கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் நீரில் கரைத்து தடவ வேண்டும்.
- ஒரு மரத்திற்கு நன்கு மக்கிய தொழு உரம் (10 கிலோ) / வேப்பம் புண்ணாக்கு (1 கிலோ) / மண்புழு உரம் (2 கிலோ) அல்லது அசோஸ்பைரில்லம் (100 கிராம்), பாஸ்போ பேக்டீரியா போன்ற உயிர் உரங்கள் (100 கிராம்) இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

**காய்ப்பு பருவத்தில் உள்ள மரங்கள்**

- வேர் பகுதி சேதமடையாமல் மரங்கள் சாய்ந்து இருந்தால் கயிறு கட்டி அல்லது இயந்திரத்தின் மூலம் மரத்தை நிமிர்த்தி மண் அணைக்க வேண்டும்.
- சாய்ந்த மரங்களில் 60 முதல் 80 விழுக்காடு கிளைகளை வெட்டி அகற்ற வேண்டும். வெட்டப்பட்ட இடத்தில் காப்பர் ஆக்சி குளோரைடு பசையை 300 கிராம் மருந்து ஒரு லிட்டர் நீரில் தடவ வேண்டும்.
- மரத்திற்கு நன்கு மக்கிய தொழு உரம் (50 கிலோ) / வேப்பம் புண்ணாக்கு (1 கிலோ) / மண்புழு உரம் (2 கிலோ) மற்றும் அசோஸ்பைரில்லம் (100 கிராம்) பாஸ்போ பேக்டீரியா போன்ற உயிர் உரங்கள் (100 கிராம்) இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.
- புதிய தளிர்கள் வெட்டிய கிளைகளில் துளிர்த்த பின்பு நன்கு விளைந்த 3 அல்லது 4 தளிர் குச்சிகளை கண்டறிந்து விரும்பும் இரகங்களை கொண்டு மேல் ஒட்டு (Top Working) செய்யலாம்.
- டிசம்பர், ஜனவரி மாதங்களில் பூக்கள் பூக்கத் தொடங்கும். இப்பருவத்தில் தத்துப்பூச்சி தாக்குதலை தடுக்க அசிபேட் மருந்து ஒரு கிராம் ஒரு லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து இலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

மா, முந்திரி, பலா போன்ற மரங்களை கீழ்க்கண்ட அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து பெற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. கடலூர் மாவட்டம் – விருத்தாசலம் மற்றும் நெய்வேலி அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
2. காஞ்சிபுரம் மாவட்டம் – மேல்கதிர்பூர், மேல்ஒட்டிவாக்கம் மற்றும் பிச்சிவாக்கம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
3. கன்னியாகுமரி மாவட்டம் – கன்னியாகுமரி மற்றும் பேச்சிப்பாறை அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
4. கரூர் மாவட்டம் – முதலைப்பட்டி அரசு தோட்டக்கலைப் பண்ணை
5. கிருஷ்ணகிரி மாவட்டம் – திம்மாபுரம் மற்றும் ஜினூர் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
6. மதுரை மாவட்டம் – பூஞ்சுத்தி அரசு தோட்டக்கலைப் பண்ணை
7. நாமக்கல் மாவட்டம் – செம்மேடு மற்றும் படசோலை அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
8. புதுக்கோட்டை மாவட்டம் – குடுமியான்மலை, வல்லத்திராக்கோட்டை மற்றும் நாட்டுமங்கலம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
9. சேலம் மாவட்டம் – கருமந்துறை, மணியார்குன்றம், முள்ளுவாடி மற்றும் சிறுமலை அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
10. சிவகங்கை மாவட்டம் – தேவகோட்டை மற்றும் நேமம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
11. தஞ்சாவூர் மாவட்டம் – ஆடுதுறை மற்றும் மருங்குளம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
12. தேனி மாவட்டம் – பெரியகுளம் அரசு தோட்டக்கலைப் பண்ணை.
13. வேலூர் மாவட்டம் – கூடப்பட்டு மற்றும் நவ்லாக் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
14. விருதுநகர் மாவட்டம் – பூவானி மற்றும் திருவில்லிப்புத்தூர் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.

**செடிகளின் விலை விவரம்**

மாஒட்டுச்செடி – ரூ.60

மாமென்தண்டு ஒட்டுச் செடி – ரூ.40

முந்திரி ஒட்டுச்செடி – ரூ.24

பலா ஒட்டுச்செடி – ரூ.40

*மேலும் விவரங்களுக்கு www.tnhorticulture.gov.in என்ற வலைதளத்திலும் அருகிலுள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி பெறலாம்.*

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**